SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

## மாதத் தேர்வு 1 – ஜுன் 2019

**வகுப்பு :** ஒன்பது **மதிப்பெண்கள் :**50

**பாடம் :** தமிழ் **தேதி :**

**அ. விடைதருக. (4 * 5 =20)**

1. தூது அனுப்ப தமிழே சிறந்தது காரணங்களைத் தொகுத்தெழுதுக.
2. தமிழோவியம் கவிதையில் உங்களைக் கவர்ந்த வரிகளைக் குறித்து எழுதுக.
3. திராவிட மொழிகளின் பிரிவுகள், அவற்றில் உள்ள மொழிகள் குறித்து எழுதுக.
4. தமிழ் மொழிக்குரிய தனித்தன்மைகள் யாவை?

**ஆ. கடிதம் எழுதுக. (7)**

உமது பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதை தடை செய்யக் கோரி மாவட்ட ஆட்சியருக்கு ஒரு விண்ணப்பம் வரைக. {உமது முகவரி : தமிழரசன் / தமிழரசி, 25 குறிச்சி நகர், வெள்ளலூர், கோவை – 25 எனக் கொள்க}

**இ. கட்டுரை எழுதுக. (8)**

வளரும் செல்வமான தமிழ் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

**ஈ. விடை தருக. (10)**

1. கண்ணன் பாடினான். இத்தொடரில் எழுவாய் __________
2. ஒரு தொடரில் பயன் நிலைத்திருக்கும் இடம் _______________ எனப்படும்.
3. ‘நான் படிப்பித்தேன்’ என்பது ___________________________ வாக்கியம்.
4. ‘ராமன் பாடம் படித்தான்’ இத்தொடரை செயப்பாட்டு வினையாக மாற்றுக.
5. பிரித்தால் பொருள் தருவது ____________________________
6. இளவழகன் வந்தான் என்பது _________________________ தொடர்.
7. ‘மாடு பால் கறந்தது’ எதிர்மறையாக மற்றுக..
8. ‘சோறு உண்டான்’ என்பதற்கு வினா எழுதுக.
9. சலசல என்பது _______________________.
10. தீ தீ தீ என்பது ___________________________.

**ஊ. பத்தியைப் படித்து விடை தருக. (5)**

கடல்வாழ் உயிரினங்களில் கணவாய் என்பது ஒரு வகை. கணவாய்களுக்குக் கால்கள் தலையிலிருந்தே முளைத்திருக்கும். அதனால் இவற்றைத் தலைக்காலிகள் எனவும் அழைப்பர். கணவாயில் பலவகை உண்டு. ஒட்டுக் கணவாய், கூந்தற் கணவாய், பேய்க் கணவாய் என்பன அவை. கடற்கரையோரங்களிலும் கடலின் ஆழமான பகுதிகளிலும் அவை வாழ்கின்றன. கடற்பாறைகளிலும் ஊனத் திட்டுகளின் இடையிலும் இவை காணப்படுகின்றன. கணவாயின் உடல் நுங்கைப் போல மிருதுவாக இருக்கும். கணவாய்க்கு எட்டு முதல் பத்து கால்கள் வரை உண்டு. கால்களின் நடுவில் இதன் வாய் அமைந்துள்ளது. வாயின் தாடைகள் கிளியின் மூக்கு போல அமைந்திருக்கும். கணவாய்கள் வேண்டும் போது தம் நிறத்தை மாற்றிக் கொள்ளும். இவை தம் உடம்பிலிருந்து ‘செம்பியர்’ என்ற மையைக் கக்குவதால் அவற்றைத் தின்ன வரும் விலங்குகள் மீது பட்டு அவை மோப்ப உணர்ச்சியற்றுப் போகும். இவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன.

**வினாக்கள்**

i. கணவாயின் வாய் எங்கு அமைந்துள்ளது?

ii. அ) தலையில் ஆ)கழுத்தில் இ) வயிற்றில் ஈ) கால்களில்

iii. கணவாயின் உடல் எது போல் அமைந்துள்ளது?

iv. அ) பூனையைப் போல் மென்மையாக ஆ) புறாவைப் போல் கருமையாக

v. இ) பஞ்சினைப் போல் மென்மையாக ஈ) நுங்கைப் போல் மிருதுவாக

vi. கணவாய்க்கு எத்தனை கால்கள் உண்டு?

vii. அ) எட்டு ஆ) ஆறு முதல் எட்டு வரை

viii. இ) பத்து ஈ) எட்டு முதல் பத்து வரை

ix. கணவாய்கள் தம் உடம்பிலிருந்து என்ன மையைக் கக்குகின்றன?

x. அ) மாப்பியர் ஆ) செம்பியர் இ) கெம்பியர் ஈ) லெம்பியர்

xi. கணவாய்கள் எவ்வாறு இனவிருத்தி செய்கின்றன?

xii. அ) குட்டி போட்டு ஆ) செம்பியார் என்னும் மையைக் கக்கி

xiii. இ) முட்டையிட்டிக் குஞ்சு பொரித்து ஈ) உடலின் நிறத்தை மாற்றி